இன்று நம் நாட்டில் தலைவிரித்தாடும் சீர்கேடான நிலையில், சரகஸம்ஹிதையில் சொல்லப்பட்ட அநேக உபதேசங்கள் நிலை சீர்பட உதவும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இன்று விஞ்ஞானங்கள் வளர்ந்துள்ள அளவில் வெளிப்படையான அறிவு வளர்ந்துள்ளதே தவிர, மனிதன் நல்ல பண்பாட்டுடனும், மனித சமூகத்திற்கு ஸேவை செய்யும் எண்ணத்துடனும், மனிதனாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடனும், தன்னுடைய அறிவை வளர்க்க வேண்டும் என்ற மனப்பான்மையுடனும் கூடியவனாக இருக்கிறானா என்பது கேள்வி. அதிக எண்ணிக்கையில் இவர்களைக் காண்பது அரிது என்றே தைரியமாகக் கூறலாம். காரணம் என்ன என்று யோசிப்போமாகில் நமது முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்ட வழிகள் நல்லதல்ல என்ற எண்ணம் அதிகமாகி நம்மைச் சுற்றியுள்ள வேண்டத்தகாத, – ஆனால் மனதை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ள – ஆடம்பரமான வாழ்க்கையின் சூழ்நிலை நம்மை நமது கடமையினின்றும் வழுவச் செய்து முள்ளுப் பாதையில் நம்மை அறியாமலேயே இழுத்துச் செல்கிறது. இம்மாதிரியான சீர்கேடான நிலைமை ஏற்படக் காரணம் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ள நல்ல வழிகளில் செல்வதை விட்டு, தப்பு வழியில் செல்ல ஆரம்பித்தது தான் திருக்குறள் முதலான நூல்களில் கூறப்பட்டிருக்கும் நல்லுபதேசங்கள் நமக்குச் சிறந்த வழிகாட்டிகளாகும். ஆயுர்வேத வைத்திய சாஸ்திரமும் இத்தகைய நல்லுபதேசங்களைக் கூற முற்படுகிறது. உதாரணமாக :–

उपकारप्रधानः स्यादपकारपरेऽप्यरौ ।

“அபகாரம் செய்யும் பகைவனிடம் துவேஷ மனப்பான்மையைக் காட்டாமல், அவனுக்கு உபகாரம் செய்” என்று இம்மாதிரி அநேக நல்லுரைகளை வைத்தியனுக்கு முதலில் போதிக்கிறது காரணம், வைத்தியனுக்கு உலகத்தில் ஒருவரிடமும் பகைமை மனப்பான்மை வரக்கூடாதென்பது முக்கிய நோக்கம். ஒருவரிடமும் விரோத மனப்பான்மையின்றி, தன்னிடம் சிகித்ஸை செய்து கொள்ளும் அனைவருக்கும் ஒரே விதத்தில் சிகித்ஸையை

அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்விதமான மனப்பான்மையை அப்யாஸத்தினுல் அடையமுடியுமேயன்றி, வெறும் படிப்பினுல் மட்டும் பெற முடியாது. ஆரோக்கியமாக இருக்க வேண்டுமேயாகில், சரீரம் மனம் இரண்டுமே தூய்மையாக இருக்க வேண்டியது அவசியம். ஆரோக்கியமான சரீரத்தில் தான் ஆரோக்கியமான மனம் இருக்க முடியும். இரண்டினுடைய ஆரோக்கிய ஸம்பத்து இருந்தால் தான், தன்னுடைய கடமைகளை, வீட்டிற்கு, தேசத்திற்கு, மற்றும் சமூகத்திற்கு நல்ல முறையில் செய்யக்கூடும்.

அடுத்தபடியாக நோய்களைப் போக்கும் மார்க்கங்களையும் ஆயுர்வேதம் நன்ருக எடுத்துக்கூறியிருக்கிறது. நோய் என்ருல் என்ன? தோஷங்கள் இயற்கை நிலையைவிட்டு நழுவி கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கும் நிலை நோய் எனப்படுகிறது.

रोगस्तु दोषवैषम्यं

— வாக்படர்

அந்த நிலையிலிருந்து இயற்கை நிலைக்கு கொண்டுவருவதே சிகித்சையாகும். தோஷங்களின் மாறுபாட்டிற்கேற்ப வியாதிகளின் ஸ்வரூபமும் மாறுபடும். ஆதலால் வியாதிகட்குண்டான பெயர்களைத் தெரிந்துகொள்ளுவதில் ஸாத்தியக் குறைவு ஏற்பட்டு வியாதியின் பெயர் தெரியாமலே இருக்கலாம் அவ்விதம் வியாதியின் பெயர் தெரியவில்லையென மனங் கலங்கவேண்டாம்.

विकारनामाकुशलो न जिह्रीयात्कदाचन ।
न हि सर्वविकाराणां नामतोऽस्ति ध्रुवा स्थितिः ।

காலத்தின் மாறுபாட்டாலும், மனித இயல்பின் மாறுதலினுலும், ஒஷதிகளின் மாறுபட்ட இயல்பாலும் புதிய நோய்கள் தோன்றுவது இயற்கையே. இவைகளனைத்தையும் எதிர் நோக்கியே நமது ஆயுர்வேத சாஸ்திரம் தேகவாகு, நோய்களின் தன்மை இவைகளுக்கேற்றபடி சிகித்ஸையில் மாறுதல்களைச் செய்ய அனுமதித்திருக்கிறது அதற்கான வழியையும் கோடி காட்டியிருக்கிறது. தோஷங்கள் கேடுற்ற நிலையில் பலவித கெடுதல்களை உண்டாக்குகின்றன. அவைகளைத் தன் நிலைக்கு கொண்டுவரும் வழிகளனைத்தும் மிகவும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆயுர்வேதம் முடிவற்றது. அதை அறிவது மிகவும் கடினம். மகத்தான பிரயத்னத்துடனும் ஊக்கத்துடனும் இதை அறிய முற்படவேண்டும்.

न चैव ह्यस्ति आयुर्वेदस्य पारं, तस्मादप्रमत्तः शश्वदस्मिन् अभियोगं गच्छेत् ।

— சரகர்

ஆரோக்யத்தை எது கொடுக்கின்றதோ அதுவே ஔஷதமென்றும், வியாதியிலிருந்து காப்பாற்றுபவனே வைத்தியர்களுக்குள் சிறந்தவன் என்றும் ஆயுர்வேதம் கூறுகிறது. இதிலிருந்து இரண்டு முக்கிய அம்சங்கள் நமக்குத் தெரிய வருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தின் அபிவிருத்தியில் என்றுமே மிகுந்த கண்காணிப்புடன் வைத்திய நிபுணர்கள் இருந்து வந்திருக்கிருர்கள் என்பது ஒன்று மற்ருென்று சிகித்ஸைக்கு வேண்டிய ஔஷதங்களையோ இதர உதவியையோ ஆயுர்வேத மூல ஸித்தாந்தங்களுக்கு முரண்படாமல் எடுத்துக்கொண்டு, வியாதிகளை உடனடியாகப் போக்கும் அளவிற்கு அவைகளை தங்களுடைய புக்தி சக்தியைக் கொண்டு ஆராய்ந்து, ஆதுரர்களுக்குச் சிறந்த வைத்திய உதவி அளித்துவந்திருக்கிருர்கள் என்பது.

வியாதிகளைத் தெரிந்துகொள்ளுவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறதோ, அந்த அளவிற்கு சிகித்ஸை செய்வதில் சிரமம் ஏற்படுவதில்லை. அந்தந்த வியாதிகளுக்குச் சிறந்த ஔஷதங்கள் ஆயுர்வேதத்தில் விரிவாகக் கூறப்படுகின்றன. அவரவர்களின் அனுபவத்திற்கேற்பவும், புத்திகூர்மைக்கேற்பவும் சிறந்த ஔஷதங்களை வைத்தியர்கள் சாஸ்திரங்களிலிருந்து எடுத்துக் கொள்ள முடிகிறது.

ஆயுர்வேதம் இன்றுவரை நிலைத்து நிற்கிறது என்பதைக் காண்கிருேம். இதர வைத்திய முறைகளினுல் தீர்க்கப்படாத வியாதிகளை ஆயுர்வேதம் நிவிருத்தி செய்கிறது. இதற்கு முக்கியமான காரணத்தை இப்பொழுது சற்று ஆராய்ந்து பார்ப்போம். ரோகங்களின் மூலகாரணங்களை ஆராய்ந்து, அவைகளை நிவிருத்தி செய்வதில் ஆயுர்வேதம் கவனம் செலுத்துகிறது. வியாதிகளை நிர்மூலமாகவே நிவிருத்தி செய்யும் வழிகளைக் கையாளுகிறது. ஒருவியாதியைப் போக்கும் நிலையில், மற்ருெரு வியாதியை அந்த சிகித்ஸை உண்டாக்குமானுல், அது சரியான சிகித்ஸையாகாது.

ஆயுர்வேத மருந்துகளை ஒரு சிறந்த வைத்தியன் பிரயோகிக்கும் போது, அவை அந்த ஆதுரனுடைய வியாதியைப் போக்குமே யல்லாமல், மற்றொரு வியாதியை உண்டு பண்ணுவதாக இருக்கவே இருக்காது. ஸாதாரணமாக சிறந்த ஆயுர்வேத சிகித்ஸையில் ஏற்கனவே இருக்கும் வியாதி சமனம் ஏற்படு வதற்கு ஒருக்கால் சற்று தாமதமேற்படலாமே யல்லாமல், மற்றொரு புதிய வியாதி உண்டாகாது என நிச்சயமாகச் சொல்ல லாம்.

இந்த அபூர்வ குணங்கள் நிறைந்துள்ள ஆயுர்வேத சாஸ்திரத்துக்கு என்றுமே சிறந்த காலம் உண்டு என்று உறுதி யுடன் இருக்கலாம். இன்று மேல்நாட்டு வைத்திய முறைக்கு எந்த அளவில் அதனுடைய அபிவிருத்திக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு ஆயுர்வேத அபிவிருத்திக்கு வசதிகள் இன்று செய்யப்படவில்லை ஆயுர் வேதம் பயில நல்ல அந்தஸ்துடன் கூடிய கல்லூரிகள், ஆஸ்பத்திரிகள், ஆராய்ச்சிக்கூடங்கள் இவைகள் அமைக்கப்பட வேண்டும்.

ஆயுர்வேதத்தை எவ்விதம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பதில் அபிப்பிராய பேதங்கள் பல இருக்கின்றன. இன்று புத்தக வடிவில் அச்சாகியுள்ளவைகளை ஆதியோடந்தமாக கற்பிப்பது ஒருமுறை. மற்றொருமுறை அப்புத்தகங்களில் உள்ளவைகளை விஷய வாரியாகப் பிரித்து, தனித்தனியாக போதிப்பது. மூன்றாவது ஆயுர்வேதத்தையும், நவீன வைத்திய முறையையும் இணைத்து பயிற்சி அளிப்பது இந்தியாவில் பல இடங்களில் இந்த மூன்று முறைகளும் நடைமுறையிலிருக் கின்றன. இன்னும் இந்த பயிற்சி முறைகளைப்பற்றிய சர்ச்சை முடிந்தபாடில்லை. நீடித்துக் கொண்டே இருக்கும் என்றுதான் ஊகிக்கவேண்டியிருக்கிறது.

இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் மத்ய–ராஜ்ய சர்க்கார் களின் உதாஸீனமாக மனப்போக்கு என்றே சொல்லலாம். எந்த பாடதிட்டமாக இருந்தாலும் கவலைப்பட வேண்டியது இல்லை. அந்த திட்டத்தின்படி நடைமுறையில் பூரணமான ஸாதனங்களை செய்து கொடுத்து, அந்த திட்டத்தை வெற்றிபெறச் செய்து அதிலிருந்து தேர்ச்சிபெற்று வருபவருக்கு, சமூக அந்தஸ்து தொழில் செய்யும் வாய்ப்பு, அதிகாரம், அர்த்த ஸம்பத்துடன் கூடிய நிலை இவைகளை அரசினர் செய்து கொடுத்திருந்தாரே யாகில், இந்தமூன்று திட்டங்களும் வெற்றி பெற்றிருக்கும்.

இந்த திட்டங்களை தீர்க்கதரிசனத்துடனும், ஊக்கத்துடனும் செயலாற்ற நல்ல தேர்ச்சியுள்ள ஆரோக்கிய மந்திரியையும் நியமித்து ஆயுர்வேத இலாகாவை தனிப்பட்ட முறையில் பிரித்து ஆயுர்வேத நிபுணர் ஒருவர் கையில் உடனேயே ஒப்படைக்க வேண்டும். இந்த நிபுணர், தேர்ந்த வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவை நியமித்து, நல்ல பாடதிட்டத்தை வகுத்து அதை செயலாக்க அரசினருக்கு சிபார்சு செய்ய வேண்டும். அந்த சிபார்சுகளை அரசினர் நிறைவேற்றி வைக்கவேண்டும்.

இதுவரை பல கமிட்டிகளை அரசினர் நியமித்தார்களே தவிர, அவர்களுடைய சிபார்சுகளை நிறைவேற்ற முற்படவில்லை எனவே கூறலாம். இதற்கு காரணங்கள் பலவிதமாகக் கூறப்படுகின்றன. காரணம் எதுவாக இருந்தாலும், ஆயுர்வேதத்தின் நிலையில் அபிவிருத்தி ஏற்படாததற்கு அரசினரின் அசிரத்தையே காரணம. கமிட்டிகளின் சிபார்சுகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை ஆனல் அவைகளைப்பற்றி ஒருவித முடிவும் எடுக்கப்படுவதே இல்லை. மறுபடியும் சில வருஷங்கள் கழித்து, சில நிர்ப்பந்த நிலைகட்குச் சமாதானம் ஏற்படுவதற்காக மற்றொரு கமிட்டியை, நியமிப்பது வழக்கமாகிவிட்டது. இம் மாதிரியாகவே பல வருஷங்கள் கடந்துவிட்டன. இனிமேலாவது காலம் கடத்தாமல், ஆயுர்வேதப் படிப்பிற்கு வேண்டிய ஸௌகரியங்களையும் செய்து கொடுக்கும்படி அரசினரை வற்புறுத்தவேண்டும்.

ஆயுர்வேதம் இரண்டு நிலைகளில் பயிற்சியளிக்கப்பட வேண்டும் :

1 ஸாதாரண வைத்தியப்பயிற்சி 2. விசேஷ வைத்தியப் பயிற்சி. இதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு.

படிப்பு முறைக்கேற்றபடி பாடப்புத்தகங்களை எழுதவேண்டும். ஸாதாரணமாக தொழிற்பயிற்சி பெற்று சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலோ தனியாகவோ தொழில் செய்வதற்குப் போதுமான அறிவைப் புகட்டவேண்டும். இந்த நிலையில் உள்ளவனுக்கு ஆராய்ச்சியாளருக்கு வேண்டிய விஷயங்களை சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை. தொழிற்பயிற்சிக்கு அனுகுணமான ஸகலவிதமான பயிற்சிகளையும் சேர்த்த விஷயங்களுடன் கூடிய பாடபுத்தகம் அமைக்கப்படவேண்டும் ஆராய்ச்சியாளராக பயிற்சி பெறுபவருக்கும், ஆசிரியராகப் பணிபுரிபவருக்கும் மூலக்கிரந்தங்களை அப்படியே வியாக்யானங்களுடன் படிக்க வசதியளிக்க வேண்டும் ஸூத்ர ரூபமாகச் சொல்லப்பட்ட விஷயங்களை,

விவரமாக எளிய நடையில் அமைத்து, ஸாமான்ய ஞானம் உடையவன்கூட எளிதில் புரிந்துகொண்டு, வைத்தியம் செய்வதற்கு உதவியாய் இருக்கவேண்டும் இன்றைய மாணவனுக்கு விளக்கம் கூறினலன்றி, ஸூத்ரரூபங்களில் இருப்பவைகளை அவனல் புரிந்துகொள்ள முடிவதில்லை.

कालबुद्धीन्द्रियार्थानां योगो मिथ्या न चाति च ।
द्वयाश्रयाणां व्याधीनां त्रिविधो हेतुसंग्रहः ॥

இதற்கு இரண்டு மூன்று பக்கங்கள் விளக்கம் கூறினல்தான் முழுவதும் அறிந்துகொள்ள முடியும். தனித்தனியாக மூலத்தையும், விரிவுரையையும் அச்சிட்டு இந்த மாணவனுக்கு வழங்கலாம். இதைவிடச் சிறந்தது விரிவான பாடப்புத்தகத்தை எழுதி அமைப்பதேயாகும்.

ஆயுர்வேதம் கற்க இன்றைய சூழ்நிலை ஏற்றதாக இல்லை எனவே கூறவேண்டியிருக்கிறது இதைக்கற்பதற்கு ஸம்ஸ்கிருத பாஷாஞானம் மிகவும் தேவைப்படுகிறது ஸம்ஸ்கிருத பாஷையை ஆயுர்வேதப்படிப்பிற்கு முன்னதாகவே கற்க ஏற்பாடு செய்ய வேண்டுமேயன்றி, ஆயுர்வேதம் படிக்க ஆரம்பித்த பின் கற்பது உசிதமாகாது. ஆயுர்வேதம் படிப்பதற்கான பிரவேச யோக்யதையை முன்னதாகவே தீர்மானிக்கவேண்டும். அந்த யோக்யதையைப் பெற்றவர்களையே ஆயுர்வேதக் கல்லூரியில் அனுமதிக்கவேண்டும்.

இன்று நமது ராஜ்யமான தமிழ் நாட்டில் S. S. L. C.-யில் ஸம்ஸ்கிருதம் பாட திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருத ஞானம் ஆயுர்வேதக் கல்லூரியில் சேருபவர்கட்கு அவசியமாக்கப்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலை காரணமாக இன்று பாளையங்கோட்டை இந்திய வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேதம் கற்க மாணவர் கிடைப்பதில்லை. இதர இடங்களில் ஸம்ஸ்கிருதம் மட்டும் கற்பவர்கள் இக்கல்லூரியில் சேருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை இவர்கட்கு S. S. L. C., P. U. C. தேறிய மாணவர்கட்கு உள்ள ஆங்கில ஞானம் இல்லை என்பதே முக்கிய காரணம் தனியாக ஸம்ஸ்கிருதம் பயின்றவர்கள் (Matriculation) மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தனிப்பட்ட முறையில் தேறி பிறகு P. U C.க்குச் சமமான ஆங்கிலப் பரீக்ஷையில் தேறி ஆயுர்வேதக் கல்லூரியில் மனுச்செய்யவேண்டும். இவ்விதம் செய்தாலும் சமூக அந்தஸ்து, வைத்தியத்தொழிலில் நல்ல வாய்ப்பு இவைகள் அளிக்கப்படுவதில்லை ஆதலால் இவர்களையும் இக்கல்லூரி ஏற்பதில்லை.

மேலும், தனிப்பட்ட ஆயுர்வேதப் பயிற்சி அளிக்கும் கல்லூரியில் சேருவதற்கு P. U. C. வரையிலுள்ள ஆங்கிலப்படிப்பின் அவசியம் எதற்கு என்பது புரியவில்லை. ஆங்கில பாஷையின் அறிவு அவனுடைய ஆயுர்வேதப் படிப்புக்கு எவ்விதம் உதவும் எனத்தெரியவில்லை. ஆங்கில வைத்யப் பயிற்சி யளிப்பதாக இருந்தால் இந்தப் படிப்பு அவசியமே. அப்படியே சம்ஸ்கிருதம் P. U. C. அளவுக்கு கற்பிக்கப்படுவது, ஆயுர்வேத புத்தகங்களான சரக ஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை முதலிய மூலக்கிரந்தங்களை அப்படியே போதிப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் போதியதாக ஆகாது. இன்றுள்ள சூழ்நிலையில் நல்ல வைத்தியனாகத் திகழ அவன் மாணவனாக இருக்கும் நிலையில் கற்பிக்கப்படும் அறிவு, பின்பு அவனுடைய தொழில் புரிவதற்கு உதவி புரிவதாக இருக்கவேண்டும் என்பது மிக அவசியம். அவ்விதம் தொழில் புரிவதற்கு எந்த விஷயங்கள் அத்யாவசியமோ அவைகளை மட்டும், அவனுக்கு எளிதில் புரியும்படியாக தயாரித்து, அவைகளை அவனுக்கு போதிக்கவேண்டும். ஆதலால், ஆயுர்வேதம் எந்த முறையில் கற்கவேண்டும் என்று தீர்மானிக்கவேண்டியது மிகவும் அவசியம். மூலக்கிரந்தங்களை ஆதியோடந்தமாகப் போதிப்பது வைத்தியத்தொழில் செய்ய இன்றுள்ள சூழ்நிலையில் அதிகமாக உபகாரம் அளிப்பதாக இல்லை ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கட்கு மட்டுமே கிரந்தவாரியாகப் படிப்பது அதிக உபகாரமாகும். இந்த மூலகிரந்தங்களில் இருக்கும் விஷயங்களை விஷயவாரியாகப் பிரித்து முதலில் எழுதவேண்டும். எங்கு விரிவுரை தேவையோ அவைகளைச் சேர்த்தே மூலத்துடன் எழுதவேண்டும். அந்தப் பாட புத்தகப்படி மாணவர்கட்கு போதனை அளிக்கப்படவேண்டும். இந்த ரீதியில் ஹிந்தி பாஷையில் விஷயவாரியான புத்தகங்களை தற்சமயம் தயார்செய்திருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி மிகவும் போற்றத்தக்கதே. இவர்களுடைய பிரயத்தனங்களை ஆதாரமாகக்கொண்டு, தமிழில் விஷயவாரியாக பாட புத்தகங்களை எழுதி பிரசுரிக்கவேண்டும்

இக்காரியத்தில் ஒன்றைமட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவது அவசியம். ஆயுர்வேத மூலக்ரந்தங்களில் கூறப்பட்டுள்ள பரிபாஷாச் சொற்களை (Technical Terms) இந்த நவீன புத்தகங்களில் அப்படியே எழுதி அதற்கு வேண்டிய விளக்கங்களையும் கூடவே கொடுத்துவிடவேண்டும். இவ்விதம் ஆயுர்வேதம் படித்தவன் ஆயுர்வேத ஆராய்ச்சியில் ஈடுபடுவதாயிருப்பின், மூலகிரந்தங்களில் காணப்படும் பரிபாஷாச் சொற்கள் புதியனவாக இருக்காது. மூலக்கிரந்தங்களை படிப்பது அதிகக் கஷ்டமாக இராது. மேலும் சுலபமாகவே புரிந்துகொள்வதற்கும் உதவியாகும்.

இவ்விதம் தேர்ச்சி பெற்று வைத்தியனுகத் திகழவிருப்ப வனுக்கு, அவனது படிப்புக் காலத்திலும், படிப்பு முடிந்த பின்பும் ஓரிரு ஆண்டுகளுக்கு நேரிடையான தொழிற் பயிற்சி (Practical Training) அளிக்கப்படவேண்டும். எவ்வளவு காலம் புத்தங்களே படித்தபோதிலும், வியாதியுள்ளவனே நேராகப் பார்த்து வைத்தியம் செய்யும்போது, படிப்பினுல் ஏற்பட்ட ஞானத்தைப் பயன்படுத்துவதில் பலவிதமான சந்தேகங்கள் ஏற்படலாம். இவைகளேயெல்லாம் போக்கிக்கொள்வதற்கு இந்தவிதமான தொழிற் பயிற்சி பெரிதும் உதவும். மக்களிடையே நல்ல மதிப்பைப் பெறவும், வைத்தியத் தொழிலில் தன்னம்பிக்கை யுடன் ஈடுபடவும் இவனுக்குப் போதுமான தைரியமும் ஊக்கமும் இப்பொழுதுதான் ஏற்படுகிறது.

படிப்பு முடிந்தபிறகு, நல்ல எதிர்காலம் தனக்கு ஏற்பட வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இந்த வைத்தியன் முயற்சி செய்கிருன். எந்தப் பாதை தனக்கு உகந்தது என்று தீர்மானிக்க இவனுக்கு சில காலம் ஆகிறது. சில நாட்கள் தொழிலே நடத்த முயல்கிருன். அத்துறையில் அவன் காணும் வெற்றி தோல்விக்கேற்றபடி அவனுடைய வருங்காலத்தை வகுக்க எண்ணுகிருன். தொழிலில் சிரமமேற்படின், உத்தியோக வேட்டையில் இறங்க நாட்டம் கொள்கிருன். ஆனுல் உத்தியோ கத்தில் அவன் எதிர்பார்க்கும் அளவிற்கு, எளிதில் அவனுக்கு வஸதிகளுடன் நல்ல சூழ்நிலே ஏற்படக் காலதாமதமாகிறது. இதர வைத்திய முறைகளேப் பயின்று நல்ல அந்தஸ்துடன் இருப்பவர்களேக் கண்டு, அந்நிலேயைத் தானும் அடையவேண்டும் என ஆர்வம் உண்டாகிறது. அவர்களுக்குச் சமமான அந்தஸ்தையும், தொழில் புரியும் வாய்ப்பையும் அரசினரிட மிருந்து பெற முயற்சி எடுக்கிருன். ஆனுல் அது கிட்டாதபோது மனமுடைகிருன். இவ்வாறு தொழிலில் சிரமப்படுபவர்களேக் காணும்போது, இந்தத் தொழிலில் ஈடுபடுத்தவும், ஈடுபடவும் ஸமூகத்திலுள்ள மற்றவர்களுக்கு சிரத்தை குறைகிறது. இனியும் இதன் முடிவைக் கூறவேண்டாமல்லவா?

இதற்கு மாருக தனித்தொழில் புரிய முயற்சி செய்பவன் தொழிலில் வெற்றி காணுவானுயின்-ஆனுல் வெற்றிகாணுவதற்கு பல ஆண்டுகள் பொறுமையுடன் அல்லவா இருக்கவேண்டும்!- அது வரவேற்கத் தக்கதே. இவ்விதம் இந்த இரண்டு விதத்திலும் இந்த வைத்தியனுக்கு அந்தஸ்து உயர, அரசினர் சரியான முறையில் படிப்பு முறை தொழிற் பயிற்சி, ஸமூக அந்தஸ்து முதலானவைகளே அமைத்து, இதர வைத்திய முறையில் உள்ள

வர்களுக்கு எந்த விதத்திலும் குறையாமல் இவர்களுக்கும் ஸம அந்தஸ்து, வாய்ப்பு இவைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அலோபதி வைத்திய முறைக்கு பூர்ண ஆதரவு கொடுத்து, மக்களின் கவனத்தை அம்முறையில் உள்ள சிகித்ஸை முறைகளில் ஈர்த்து. நம்பிக்கை பெறச் செய்து அந்த வைத்தியம்தான் விஞ்ஞான அடிப்படையில் செயலாற்றவல்லது என்ற எண்ணம் மக்களிடையே தோன்ற கடந்த ஒரு நூற்றாண்டாக வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன அம்முறையில் வைத்தியம் செய்து கொள்ள மக்களுக்கு சகல விதமான வாய்ப்புக்களையும், சௌகரியங்களையும் செய்து கொடுத்து, இதர வைத்திய முறைகள் இருக்கும் இடமே தெரியாமல் செய்யவும் வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

அலோபதி வைத்திய முறைகளில் வைத்தியம் செய்து, குணம் காணாத மக்கள் தானாகவே ஆயுர்வேத வைத்திய முறையை நாடி வருகிறார்கள் என்பது கண்கூடு. அரசினர் அலோபதி முறைக்கு அளிக்கும் ஆதரவு காரணமாகவே, மக்களும் அந்த வைத்திய முறையை முதலில் நாடுகிறார்கள். ஆயுர்வேத வைத்திய முறையை நாடுவதில்லை. ஆயுர்வேத வைத்தியர்கள் இன்று தங்களுடைய திறமையைக் காண்பிக்க முடியவில்லை என்பதற்கு முக்கியமான காரணம் அவர்களுக்கு உரிய கௌரவம், அந்தஸ்து, சமூகத்தொடர்பு இவைகட்கு வசதி செய்து கொடுக்கப் படவில்லை என்பதுதான். தொழிலைத் திறம்பட நடத்த அரசினர் வழி வகுத்துக் கொடுக்குமேயானால், ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத முறைப்படியே நல்ல முறையில் வைத்தியம் செய்து மக்களுடைய நன்மதிப்புக்கு ஆளாகி, சிறந்த ஸேவையை செய்வதற்கு நிச்சயமாக முடியும்.

மாணவர்கள் ஆயுர்வேத படிப்பிற்கு அதிக அளவில் வருவதற்கு, அவர்கட்கு வாழ்க்கையில் மேம்பாடு ஏற்படும் வகையில் எல்லாவித வாய்ப்புக்களையும் அடைவதற்கு அரசாங்கம் உறுதி அளிக்கவேண்டும் அதற்கு உண்டான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். அலோபதி வைத்திய முறையில் பயிலும் மாணவனுக்கு எல்லாவித அந்தஸ்து, உயர்ந்த நிலை, நல்வாழ்வு இவற்றிற்கான எல்லா வழிகளிலும் ஏற்பாடுகள் செய்து கொடுத்து, ஆயுர்வேதம் பயிலும் மாணவனுக்கு அவைகளை மறுத்தால், - அதுவும் ஏற்றத்தாழ்வான நிலையில்கூட, - மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதில் ஆச்சரியமில்லை

ஒரு வைத்திய முறையில் மட்டும் பயிற்சி பெற்றவன் மற்ற வைத்திய முறைகளில் சொல்லப்பட்டவைகளை உபயோகப் படுத்துவது என்பது தவறானது என்று பொதுவாக எண்ண இடமுண்டு. ஆனால் இந்த அபிப்பிராயத்தை நன்கு ஆராய்ந்து முடிவு செய்யவேண்டியதாகும். நோயால் அவதிப் படும் மக்களுடைய நோயைப் போக்கி திரும்ப ஆரோக்கிய நிலையை அடைய அவர்களுக்கு உதவுவதே உலகில் உள்ள டாக்டர்களோ, வைத்தியர்களோ இவர்களுடைய முதற் கடமை யாகும். இதுவே அவர்களுடைய தலைசிறந்த குறிக்கோளாகவும் இருத்தல்வேண்டும். இதற்கு உண்டான வழிகளை அவர்கள் மேற்கொள்ளுவதுதான் நியாயமாகும். உதாரணமாக, ஜ்வரமானி முதலானவைகளை ஆயுர்வேத வைத்தியன் உபயோகிப்பது தவறு என்று சிலர் சொல்லலாம். ஆனால் அவ்விதம் நினைப்பது தவறாகும். வியாதியின் ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளும் நவீன சாதனங்களை உபயோகித்து வியாதிகளை நிர்ணயம் செய்வது தவறு என்று நினைப்பது ஒரு விஞ்ஞான அறிவு படைத்தவனுடைய கருத்து என்று நினைப்பதற்கில்லை. ஆயுர்வேதம் ஒரு பூர்ணமான சாஸ்திரம். நவீன விஞ்ஞானங்கள் அவ்வப்போது புதிதாகக் கண்டுபிடிக்கும் விஷயங்களை எல்லாம் ஆயுர்வேத மூலதத்துவங் களுடைய அடிப்படையில் ஆராய்ந்து, அவைகளை ஆயுர்வேதத் துடன் சேர்த்துக் கொள்ளுவதில் தவறு இல்லை. இம்முறையை ஆயுர்வேத முறை வரவேற்றே இருக்கிறது. இவ்விதம் பலவித மருந்துகளை ஆயுர்வேதத்தில் முன்னரே சேர்த்திருக்கிறார்கள். ரஸ சாஸ்திரங்கள் சரகர் முதலானவர்களின் காலத்தில் இல்லாமல், சென்ற 15 நூற்றாண்டு காலத்திற்குள்ளாகவே ஆயுர்வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதேபோல் அலோ பதியில் சென்ற சில ஆண்டுகளுக்குமுன் இல்லாத ஸர்ப்பகந்தா முதலான ஆயுர்வேத சரக்குகள் இன்று பிரஸித்தமான ஔஷதங் களைத் தயாரிப்பதில் பெரிதும் உதவுகின்றன.

இங்கு சேர்க்கப்படும் விதம்தான் முக்கியமே தவிர, சேர்த்துக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. இவ்விதம் அந்தந்த விஞ்ஞான சாஸ்திரங்கள் அவ்வப்போது அதற்குண்டான தனிப்பட்ட முறைகளில் விசேஷமாக வளர்ந்து வந்திருக்கின்றன. அலோபதிக் வைத்திய முறையில் மிகவும் குறுகிய காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், அந்த விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டவர்கள் விஞ்ஞானிகளேயல்லாமல், வைத்தியத் தொழிலில் ஈடுபட்ட டாக்டர்கள் அல்ல. அந்தத் துறையில் வளர்ச்சிபெற, ஆராய்ச்சியாளர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் அரசாங்கத்துறையினர்—வெளிநாட்டில்— அவர்களுக்கு செய்து கொடுத்ததன் பயனேயாகும்.

இந்த ரீதியில் சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசெய்து, கண்டு பிடித்த ஔஷதங்களின் பயனை பல்லாயிரம் மக்கள் அடைவதற்கு வசதியளிக்கப்படுகிறது இதையேதான் அலோபதி டாக்டர்களும் உபயோகித்து பயனை அடைகிறார்கள். ஆகவே விஞ்ஞானிகள் கண்டுபிடித்தவற்றை எந்த முறை வைத்தியரும் உபயோகித்துப் பயனடைவதற்கு தடைகள் ஏற்படக்கூடாது. நவீன வைத்தியன் எண்ணப்படி ஆயுர்வேதம் வளர்ச்சியடையாமல் நின்று விட்டது; அதனால் அது இக்காலத்திற்கு உதவாது என்று சொல்வதும் மற்றொருபுறம் அது வளருவதற்கு எல்லா தடைகளையும் விதிக்க வேண்டும் என்பதும் ஒன்றுக்கொன்று முரணான அபிப்பிராயம். இந்த நிலைமை முற்றும் மாறுவதுதான் நியாயம். இந்த நிலைமை மாறுவதற்கும் அரசாங்கம்தான் முயலவேண்டும்.

ஆயுர்வேதம் எந்த முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்? எது அதற்குத் தேவை, எது தேவையில்லை என்று நிர்ணயம் செய்துகொள்ள ஆயுர்வேத வைத்தியனுக்கு பூர்ண அதிகாரமும் சுதந்திரமும் இருக்கவேண்டும். இந்த அபிவிருத்தித் துறையில் வைத்தியனுக்கு பூர்ண உதவி அளித்து, ஆயுர்வேதத்தை இன்றைய மக்களுக்குச் சிறந்த முறையில் பயன்படும் அளவில் அரசினர் எல்லாவற்றையும் செய்யவேண்டும். அவனுடைய ஆராய்ச்சிக்குத் தடையாக இதுகாறும் இருந்த எல்லாவற்றையும் நீக்கிவிடவேண்டும். இந்த அளவில் அரசினர் பொறுப்பை ஏற்று வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் பக்ஷத்தில், ஆயுர் வேதம் வளர்ச்சி தடைபட்டு நிற்காமல் அஷ்டாங்கங்களிலும் மக்களுக்குப் பூர்ணமான உதவியை குறுகிய காலத்திலேயே செய்து கொடுப்பது உறுதியாகும்.

அலோபதிக் வைத்தியம் படிக்கும்போது ஏற்படும் அளவிற்கு மேல், வைத்தியப் பட்டம் பெற்று தொழில் நடத்தும்போது மருந்துக் கடிதங்கள் (literatures) மூலம் அவன் பெறும் அறிவு இன்னும் அதிகமானது. படிக்கும்போது இருந்ததற்கும், தொழில் நடத்தும்போது இருக்கும் ஞானத்திற்கும் சம்பந்தமே இல்லாமல் கூட சில சமயம் ஏற்படுகிறது. அலோபதியில் சிறந்த சிகித்ஸகளைத் திகழ அன்றாடம் விஞ்ஞானிகளின் அறிவின் பயனால் வெளிக் கொணரப்படும் மருந்து கடைக்காரர்களின் ஏடுகள் (literatures). தான் உதவுகின்றன.

இன்று வழிகாட்டியாக அமைந்துள்ள வியாதிகளை அறியும் சக்திபடைத்த வைத்தியர்கட்கு (ஆயுர்வேதமோ, அலோபதியோ) இந்த ஏடுகளின் உபகாரம் ஸமானமானதே. கீழாநெல்லி,

கையாந்தரை முதலான ஔஷதங்கள் சேர்ந்த மருந்துகளை இரண்டு முறை வைத்தியர்களும் உபயோகப்படுத்துவது ஸாத்தியமேயாகும் அதே முறையில் இன்று பிரசித்தமாயிருக்கும் நவீன மருந்துகளையும் ஆயுர்வேத அடிப்படையில் புரிந்து கொண்டு உபயோகிக்க, ஆயுர்வேத வைத்தியனுக்கு ஏன் தடை விதிக்கப்படுகிறது என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது அலோபதிக் வைத்தியர்கள் ஆயுர்வேத மருந்து களைக் கையாளுவதற்குத் தடையொன்றுமில்லை என்று இருப்பது போன்றே, அலோபதிக் மருந்துகளை ஆயுர்வேத வைத்தியனும் உபயோகப்படுத்துவதற்கு தடை இருக்கக் கூடாது. அதுதான் நியாயமும்கூட. ஆயுர்வேத வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும்.

இன்று காமலை, பக்ஷவதம் முதலான நோய்களுக்கு அலோபதி வைத்திய முறையில் உள்ள சிகித்ஸை முறைகளைவிட ஆயுர்வேத முறையில்தான் அதிகமான சிகித்ஸை முறைகள் பலன் அளிக்கின்றன என்பதை நாம் அறிவோம். அதேபோல் சஸ்திர சிகித்ஸை (surgery), பிரஸூதி தந்த்ரம் (midwifery) முதலானவற்றில் அலோபதியில் இருக்கும் அளவிற்கு ஆயுர்வேத முறையில் அப்பியாஸம் இல்லை என்பதும் தெளிவு. ஆயுர்வேத முறைகளில் இவைகள் விரிவாகச் சொல்லப்பட்டிருந்தும், பல நூற்றுண்டுகளாக பயிற்சி முறை விட்டுப்போனதால், இன்று நடைமுறையில் அம்முறைகள் நம்மை விட்டுப் பிரிந்து நிற்கின்றன. இன்று நவீன வைத்தியத்தில் இருக்கும் சஸ்திர ஆயுதங்களைக் கொண்டும், பிரஸவ ஸம்பந்தமான சிகித்ஸை முறைகள் உட்பட எல்லாவற்றையும், ஆயுர்வேத முறைப்படி நாம் கையாளுவது ஸாத்தியமே. இதற்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்குமேயாகில், பயிற்சி முறையில் இழந்தவைகளைத் திரும்பவும் நாம் பெறுவது முடியும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

இங்கு முக்கியமாக மனதிற்கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. ஆயுர்வேத சாஸ்திரம் மிகவும் ஸூக்ஷ்மமான பஞ்சபூத, த்ரிதோஷ அடிப்படையில் உருவாக்கப்பட்ட பூர்ணமான வைத்திய ஆரோக்கிய சாஸ்திரம். அதனுடைய மூலசித்தாந்தப்படி அலோபதி முதலான ஸ்தூலமான வைத்திய முறைகளில் கூறப் பட்ட, அவ்வப்போது மாறிக்கொண்டிருக்கும் ஔஷதங்களையோ சிகித்ஸை முறைகளையோ, ஆயுர்வேதத்துடன் சேர்த்துக்கொள்ளு வது அவ்வளவு சுலபமான கார்யமல்ல. அதற்கு பூர்ணமான சாஸ்திர ஞானம் உள்ள ஆயுர்வேத வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவே கார்யங்களைச் செய்வது சாத்தியமாகும். அதே

போல் ஆயுர்வேதத்தில் ஸூக்ஷ்ம நிலையில் சொல்லப்பட்ட உண்மைகளை நவீன விஞ்ஞானம் காட்டிக்கொடுக்குமேயானால், அதை ஆயுர்வேதம் ஏற்கத் தயங்க வேண்டியதும் இல்லை. இந்தக் கண்ணோட்டத்துடன் ஆராய்ச்சியில் இறங்கினால் ஆயுர்வேத வைத்தியம் இன்றைய நிலைக்கு பூர்ண உதவியளிப்பது கஷ்டமானதல்ல.

ஆயுர்வேதம் ஒரு விஞ்ஞான சாஸ்திரம் (Scientific system) என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். அதை நாட்டு வைத்திய முறை (Indigenous system) என்று அரசாங்கம் பெயரிட்டிருப்பதன் நோக்கம் புரியவில்லை. முன்பெல்லாம் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு நாட்டு முறை இருந்தது இந்தியாவைத் தவிர மற்ற பல தேசங்களில் அவைகள் இன்று மறைந்து விட்டன. ஆனால் இந்தியாவில் பூர்ண பொலிவுடன் இன்றும் தலை தூக்கி நின்றுகொண்டிருக்கிறது ஆயுர்வேதம். அதற்குக் காரணம் அது அமைக்கப்பட்டிருக்கும் மூல தத்துவங்களின் அடிப்படையான பலம்.

இவ்விதம் இன்றுவரை நிலைத்து நிற்கும் ஆயுர்வேதத்தின் சிகித்ஸை முறையில் சிகித்ஸைபெற நம்மை அணுகும் ஆதுரர்களுக்கு அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் சிகித்ஸை செய்ய முயற்சிப்பது நமது கடமையாகும். நாமும் நம் முறையை விட்டு, இதர வைத்திய முறைகளைக் கையாளுவது பிரயோஜனமற்றதாகும். ஆயுர்வேத முறைப்படி சிகித்ஸை செய்வது மிகுந்த அனுபவம் உள்ளவர்களுக்கே எளிதாகும். புதிதாக ஆயுர்வேதக் கல்லூரியிலிருந்து வெளிவந்த வைத்தியர்கட்கு கடினமாகும். அதுகாரணமாக நமது பாதையை விட்டு நகர்ந்துபோவது நியாயமாகாது

அலோபதி வைத்திய முறையில் அநேகர் இன்று வைத்தியம் செய்கிறார்கள். அம்முறையில் நல்ல தேர்ச்சிபெற்ற டாக்டர்களை விட—இதரர்கள் தான் இன்ஜெக்ஷன் முதலானவைகளை வெகு சுலபமாகக் கையாளுகிறார்கள் அதற்கு முக்கியமான காரணம்—இன்று மருந்து கம்பெனிக்காரர்கள் வெளியிடும் குறிப்பேடுகள். (literatures). இவைகள் வியாதிகளைக் குறிப்பிட்டு, அதற்குத் தேவையான மருந்துகளின் விளக்கங்களையும கொடுத்து, உபயோகிக்கும் முறைகளையும் விரிவாக அக்கடிதத்தில் கூறுகின்றன. இவைகள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் இருந்தும், ஆங்கிலத்தில் அதிகமான ஞானம் பெறாத கிராமத்தில் உள்ள பல விதத்தில் தேர்ச்சிபெற்றதாகக் கொடுக்கப்பட்ட பத்திரங்

களின் போர்வையில் இருந்துகொண்டிருக்கும் வைத்தியர்கள், இக்கடிதங்களில் விளக்கப்பட்டிருக்கும் (Injection) இன்ஜெக்ஷன் மருந்துகள் உள்பட எல்லாவற்றையும் இக்கடிதங்கள் மூலம் தெரிந்துகொண்டு வைத்தியத்தொழில் புரிகிறார்கள்.

இம்மாதிரியான வைத்தியங்களில் குணம் காணாதவர்களும் ஆயுர்வேத வைத்தியர்களை நாடி வருகிறார்கள். அவர்களுக்குச் சிறந்த முறையில் சிகித்ஸை அளிப்பதன் மூலம், ஆயுர்வேதத்தின் உபயோகத்தை மக்களிடையே பெரிதும் எடுத்துக்காட்டி, இந்த சிகித்ஸை முறையில் அவர்களுக்கு நீடித்த நம்பிக்கையை ஏற்படுத்துவது நமது கடமையாகும். இதில் பலவித கஷ்டங்களும், அஸௌகரியங்களும் இருப்பினும், இது செய்யவேண்டிய சிறந்த ஸேவையாகும். இவ்விதம் சிகித்ஸை செய்வதற்கு ஆங்காங்கே வழி வகுத்து, நாட்டு வைத்திய முறையில் அழைக்கப்படும் ஆயுர் வேதத்தை தேசீய முறை (Indian Medicine) ஸர்வ தேசீய முறை (International system) என்று ஆக்கி, அதற்கு உரிய இடத்தை அளிக்கச் செய்யவேண்டும்.

இந்த மகாநாடு மிகவும் அவசரமான காலத்தில் கூட்டப் பட்டிருக்கிறது. நமது தமிழ்நாட்டில் நல்ல முறையில் இந்திய வைத்தியத்தை அபிவிருத்தி செய்ய இதுகாறும் வழிகள் வகுக்கப் படவில்லை. ஏதோ பேரளவில் சித்த வைத்திய முறைக்கு பாளையங்கோட்டை இந்திய வைத்தியக் கல்லூரியில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது இந்த வருஷத்தில் நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்த வைத்திய மாணாக்கர்கள் கல்லூரியிலிருந்து வெளி வரவிருக்கிறார்கள் அவர்களும் தங்களுக்கு தற்சமயம் கொடுக்கப் படுவதாகவுள்ள அந்தஸ்து வேலைவாய்ப்பு முதலானவைகளில் ஐயம் கொண்டு அதற்கான அதிருப்தியை அரசினரிடம் தெரி வித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, நான்கு ஆண்டுகளில் அவர்கள் அடைந்த சித்த வைத்தியப் படிப்பு – பயிற்சிகளில் அவர்கள் தங்களுக்கு வாழ்க்கையில் நிலைக்கக் கூடிய பூர்ண நம்பிக்கையை பெற்றுள்ளார்கள் என்று திடமாகக் கூற முடியுமா என்பதே கேள்வி மேலும் அம் மாணவர்கள், ஆங்கில வைத்திய முறையிலும் பயிற்சி அளிக்கப்படுவதற்கு அரசினரிடம் முறையீடு செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இந்த சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தீவிரமாக யோசித்து நல்ல முடிவு எடுத்து, நமது அபிப்பிராயத்தை அரசினரிடம் தெரிவிக்க வேண்டும்

அடுத்தபடியாக ஆயுர்வேதம் சம்பந்தப்பட்டவரை, சர்க்கார் அதற்கு தனி இலாகாவை அமைத்து, ஆயுர்வேதத்தில் தேர்ச்சி

பெற்ற வைத்தியரின் பூர்ண அதிகாரத்தின் கீழ் இயங்கச் செய்ய வேண்டும். இந்த இலாகா செவ்வனே செயல்பட, சட்ட பூர்வமான நியமனங்கள் செய்யப்படவேண்டும். நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆயுர்வேதம் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் கவனிப்பதற்கு மத்திய ஆயுர்வேத கவுன்ஸில், மாநில டைரக்டர்கள், மாநில ஆயுர்வேதக் குழு இவைகள் அமைக்கப்படவேண்டும். இந்த ஏற்பாடுகளே ஆயுர்வேதம் ஒரே சீரான அமைப்பில் பாரததேசம் பூராவும் அமைவதற்கு அடிகோலும்.

ஆயுர்வேத பாடதிட்டம் அகில இந்திய ரீதியில் ஒரேவிதமாக சீரான முறையில் அமைக்கப்படவேண்டும். தற்போது சுத்த ஆயுர்வேதம் சில மாநிலங்களிலும், மிச்ர ஆயுர்வேதம் மற்றும் சில மாநிலங்களிலும் பாடதிட்டத்தில் அமைந்திருக்கின்றன. இந்த இருவிதமான பாட திட்டங்களில் ஏற்படக்கூடிய குண தோஷங்களை தீவிரமாக ஆராய்ந்து, ஏதாவதொரு பாட திட்டத்தை நிர்ணயித்து, பாரததேசம் பூராவும் அங்கீகரிக்கப் பட்ட ரீதியில் இப்பாட திட்டத்தை அமைத்து செயலளவில் நிறைவேற்றவேண்டும். இனிமேலும் இதைப் பற்றிய சர்ச்சையை நீடிக்கவிடாமல், ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும்.

ஆயுர்வேத ஆராய்ச்சிகள் அனைத்தும் ஆயுர்வேத வளர்ச் சிக்குப் பயன்படுபவையாக அமைக்கப்படவேண்டும். தற்போது உள்ளது போல் மற்ற வைத்திய முறைகளின் வளர்ச்சிக்காக மட்டும் உதவும்படியாக இருக்கக்கூடாது.

நூலாராய்ச்சிக்கு தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுள்ள தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில், ஆயுர்வேத நூல் ஆராய்ச்சியின் விபாகத்தில், ஆயுர்வேத நிபுணர்களைக்கொண்டு தீவிரமான பிரயத்தினத்துடன் பிரசுரங்கள் வெளியிடப்படு கின்றன. அவர்கட்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களைப் பாராட்டுகிறோம். மேற்கொண்டு சரக ஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை முதலியவைகளையும் தமிழில் மொழி பெயர்க்க ஏற்பாடுகளைச் செய்ய மத்ய சர்க்காரை நாம் கேட்டுக்கொள்வது மிகவும் அவசியம் எனத் தோன்றுகிறது.

பாளையங்கோட்டையில் நிறுவப்பட்டுள்ள இந்திய வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேதப் பிரிவுக்கு மாணவர்கள் கிடைக்காததற்கு முக்கிய காரணம் அது ஸம்ஸ்கிருத பாஷையில் போதிக்கப்பட வேண்டும் என்றிருப்பதுதான். இதற்கு உடனடியாக ஒரு வழியை வகுக்கவேண்டும். ஒன்று S. S. L. C., P. U. C. பாட

திட்டத்தில் ஸம்ஸ்கிருதத்தை கற்பதற்கு முன்போல் வழிவகை செய்யவேண்டும். அல்லது பிராந்தீய மொழியான தமிழிலேயே ஆயுர்வேதத்தையும் போதிக்க சர்க்காரிடமும் பல்கலைக்கழகத்தினரிடமும் அனுமதியை நாடிப் பெறவேண்டும். இம்மாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்தும்வரை, இப்பிரிவுக்கு மாணவர்களை எதிர்பார்க்கவே முடியாது.

எல்லாவற்றிலும் முக்கியமாக ஒரு பணியில் நாம் பெரிதும் ஈடுபடவேண்டும். வைத்தியர்களுக்குள் பூர்ண ஒற்றுமையும் ஒத்துழைப்பையும், கட்டுப்பாட்டையும் நன்கு வளர்த்து, நமது ஸங்க சக்தியைப் பெருக்கிக்கொண்டு தமிழ்நாடு முழுவதும், மாவட்ட ரீதியில் கிளைகளை அமைத்து ஆயுர்வேதம் மூலமாக பொதுமக்களுடன் நமது தொடர்பை வளர்த்து, பொதுமக்களுக்கு ஆயுர்வேதத்தில் உள்ள நம்பிக்கையை ஸ்திரப்படுத்தி, ஆயுர்வேத வளர்ச்சியின் திட்டங்களில் நமது அபிப்ராயங்களை சர்க்காரிடம் ஒருமுகமாக எடுத்துச்சொல்ல பொது மக்களின் ஆர்வத்தை வளர்க்கவேண்டியது நமது முக்கிய பணியாகும்.

வைத்தியர்களின் ஒற்றுமையை வளர்க்கும் பணியில் வைத்திய சந்திரிகை என்னும் பத்திரிகை சென்ற 30 ஆண்டுகளுக்குமேல் ஈடுபட்டுவருகிறது. இப்பத்திரிகையை மேலும் அபிவிருத்தி செய்யும் பணியில் வைத்தியர்களுடைய பூர்ண ஒத்துழைப்பை நமது மஹா மண்டலம் நாடுகின்றது.

இப்பத்திரிகையை எவ்விதம் அபிவிருத்தி செய்வது? ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருக்கும் ஆயுர்வேத கிரந்தங்களை அப்பாஷையைக் கற்றுக்கொள்ள வழியில்லாத காரணத்தால், இன்றைய சூழ்நிலையில் படிப்பதற்கு முடிவதில்லை. அதனால் ஆயுர்வேதத்தைத் தமிழில் கற்றுக்கொள்ள வழிவகை செய்யவேண்டும். ஆயுர்வேதத்தைத் தமிழில் கற்றுக்கொள்ளுவதற்கு இன்று பலரிடம் ஆர்வமிருப்பதைக் காண்கிறோம். இவர்களுக்கு அவ்விதம் படிப்பதற்கு சௌகரியங்கள் செய்யப்படாததால், அவர்கள் ஆயுர்வேதத்தைப் பயில முடியவில்லை. இவர்கட்கு ஆயுர்வேதத்தைக் கற்பிப்பதற்கு, நல்ல பாட திட்டம் ஒன்றை நமது மஹாமண்டலம் மூலம் தயாரித்து தொடர்ந்து வைத்திய சந்திரிகையில் தமிழில் பிரசுரம் செய்து, இவர்களை ஊக்குவிக்கவேண்டும். இந்த பாடங்களை புத்தக வடிவில் வெளிப்படுத்தவேண்டும். இவ்விதம் பயில்வோருக்கு பரீக்ஷை மூலம் தேர்வு பத்திரங்கள் வழங்கவேண்டும். இந்தப் பணியை செவ்வனே செய்வோமாகில் வைத்தியர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகும்; வைத்திய சந்திரிகை பத்திரிகையும் நன்கு விரிவடையும். நாளடைவில் ஆயுர்வேத சிகித்ஸையின்

உபயோகத்தை மக்களிடையே நன்கு உணர்த்த முடியும். மக்களுடைய பலத்தைக் கொண்டும், ஆயுர்வேத சிகித்ஸையின் பலத்தைக் கொண்டும் சர்க்காரிடம் நமக்குத் தேவையான சமூக அந்தஸ்து. வேலை வாய்ப்பு முதலான சலுகைகளை சுலபமாகப் பெற முடியும், புராதனமான ஆயுர்வேத சாஸ்திரங்களில் புதைந்து கிடக்கும் விஷயங்களை எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தமிழில் எழுதி பிரசுரம் செய்யும் பணியில் ஈடுபடுவோம்.

இதற்கான காரியங்களை செயலில் நிறைவேற்ற வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை உடனடியாக அமைப்போம். நமது ஆயுர்வேத சிகித்ஸை முறைகளின் பெருமையைப் பிறர் உணரும்படி செய்யவேண்டியது நமது முக்கிய பணியாகும். இந்த தகுதியை நாம் அடையும்போது அரசாங்கத்தின் ஆதரவு நம்மைத் தேடி வரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

திருச்சியில் ஆயுர்வேத ஸேவா ஸமிதி ஆரோக்கியம் என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்து சென்ற ஏழு வருடங்களாக பொதுஜன ஸேவையில் ஈடுபட்டு வருகிறது. மேலும் இப்பணியைத் தொடர்ந்து செய்ய இந்த ஸமிதியினருக்கு நாம் பெரிதும் உதவவேண்டும்.

நமது மஹாமண்டலம் சென்ற பல ஆண்டுகளாக மிகச்சிறப்புடன் விளங்கிக்கொண்டிருக்கிறது. மக்களுக்கு ஸேவை செய்யும் பணியையே பிரதானமாகக்கொண்ட ஆயுர்வேதத்தின் நோக்கத்தை தொடர்ந்து நாம் போற்றிப் பின்பற்ற வேண்டும். மஹரிஷிகளின் அனுக்ரஹமானது நமது பணியை இனியும் சிறந்த முறையில் செய்ய நம்மெல்லோருக்கும் சரீர பலத்தையும் மனோ பலத்தையும், அருளவேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

भिषजां साधुवृत्तानां भद्रमागमशालिनाम् ।
अभ्यस्तकर्मणां भद्रं भद्रं भद्राभिलाषिणाम् ॥

நன்னடத்தையுள்ள வைத்தியர்கள் வாழ்க !
நன்கு வைத்யக் கல்வி பெற்றோர் வாழ்க !
நன்கு வைத்யத்துறையில் செய்நேர்த்தி பெற்றோர் வாழ்க !
எல்லோர் க்ஷேமத்தையும் நாடும் வைத்யர்கள் வாழ்க !

இம்காப்ஸ்

ஆராய்ச்சியும் நிலையான வளர்ச்சியும்

இம்காப்பின் கடந்த 25 ஆண்டுகால வளர்ச்சி நிலையான முன்னேற்றத்தின் அறிகுறி. மருத்துவத்துறையில் இந்த நிறுவனம் 1944-ம் ஆண்டு 224 அங்கத்தினருடன் கூட்டுறவு முறையில் சிறிய அளவில் தொடங்கப்பட்டது. இன்று இம்காப்ஸின் வசதிகள் நிறைந்த ஆராய்ச்சிப் பகுதி நம்நாட்டின் மருத்துவ மூலிகைகளின் பயனைக்குறித்து இடையுறாத ஆராய்ச்சி புரிந்து கொண்டு வருகிறது. மேலும் மருந்துகளைத் தயாரிக்கின்ற கூடமானது நவீன யந்திரங்களைப் பெற்றமையால் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, தரமானதும், தூய்மையானதுமான மருந்துகளை விரும்பும் பல லட்சக்கணக்கான மக்களின் தேவைகளை நியாய விலையில் பூர்த்தி செய்கிறது.

தி இந்தியன் மெடிகல்
பிராக்டிஷனர்ஸ்
கோவாப்பரேட்டிவ்
பார்மஸி & ஸ்டோர்ஸ் லிட்.,

IMPCOPS அடையார், சென்னை-20

கிளை அலுவலகங்கள்:
சென்னை-2, மதுரை
தாடேபள்ளி (ஆந்திரப் பிரதேசம்),
விஜயவாடா, ஹைதராபாத், பெங்களூர்



மருந்துகள் சென்னை "காமதேனு"விலும் மற்றும் பிரபலமான மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினுல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.